1981 செப்டம்பர் 1]

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருந்துகள் விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இத்தடத்தில் 15–4–1981 முதல் விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

(ஆ) இரண்டு பேருந்துகள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, தற்போது அந்த வழித்தடத்திலே பொது மக்கள் அதிகமாகப் பிரயாணம் செய்வதால் கூடுதல் பேருந்துகளை விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 15–4–1981 முதல் இரண்டு பேருந்துகளைத் துவக்கியிருக்கிறோம். அதற்குள்ளாக இன்னும் வேண்டுமென்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். மீண்டும் பரிசீலனை செய்து முடிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நகரப் பேருந்துகளுக்கு இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் : 153—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப் பெறும் நகர பேருந்துகளுக்கு (டவுன் பஸ்) இரண்டு நடத்துனர்களை நியமிக்கும் (உத்தேசிக்கும்) திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) அண்ணா, கட்டபொம்மன், பல்லவன் போக்குவரத்துக் கழகங் (மாவட்டப் பிரிவு)களைத் தவிர, மற்ற போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் நெரிசல் நேரங்களில் சில குறிப்பிட்ட வழிப்

தடங்களில் மட்டும் இரண்டு நடத்துனர்களை நியமித்துள்ளார்கள். எல்லா நகரப் பேருந்துகளுக்கும் இரண்டு நடத்துனர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளுக்கு இரண்டு நடத்துனர்களை நியமித்துள்ளமைக்காக என்னுடைய சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா, கட்டபொம்மன், போக்குவரத்துக் கழகங்களால் விடப்பட்டுள்ள நகரப் பேருந்துகள் கிராமபுரங்களுக்கு செல்வதால் அங்கிருந்து அதிகமான கூட்டம் நகர பேருந்துகள் மூலமாக நகரங்களுக்குப் பயணம் செய்வதால் அங்கே இரண்டு நடத்துனர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, தேவையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அண்ணா போக்குவரத்துக் கழகத்தால் இப்பொழுது ஓட்டப்படும் டவுன் பஸ்கள் சிலவற்றிற்கு ஓட்டுநர்களும், நடத்துனர்களும், இல்லாமையால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படி நிறுத்தப்பட்டிருந்தால் உடனடியாக அவைகளை ஓட்டுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ? உதாரணமாக இராசிபுரத்தில் இருக்கின்ற டெப்போக்களில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுப்படையான கேள்வி. இராசிபுரத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இரண்டு நடத்துனர்களை நாங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நடத்துனர்கள் இல்லாமல் பேருந்துகள், நிறுத்தப்பட்டதாக இப்படிப்பட்ட சூழ்நிலை நிச்சயமாக இல்லை. அப்படி இருந்தால் கவனித்து கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளில் நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் குறிப்பிட்ட அளவிற்கு வசூல் இருந்தால் அப்படிப்பட்ட பகுதிகளில் ஓடும் நகரப் பேருந்துகளில் கண்டிப்பாக இரண்டு நடத்துனர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசு பரிசீலித்து நடவடிக்கையெடுக்கும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளில் நடத்துனர்களாகப் பெண்களை நியமிக்கும் திட்டம் இருந்தது. தற்போது அந்தத் திட்டம் எந்த வகையில் அமல் நடத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பெருநகர்ப் பிரிவிலே பெண்களுக்காக விடப் பட்டிருக்கும் பேருந்துகளில் எட்டு பெண்களை நடத்துனர்களாக நியமித்து ஓடிக்கொண்டிருக்கிறது. அது எப்படியிருக்கிறது என்று பார்த்து அதற்குப் பின்னாலே அதை நடை முறைப்படுத்தலாமா அல்லது போதுமா என்பதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகரவர்களே, நகரப் பகுதிகளில் விடப்படும் பஸ்களை நல்ல பஸ்களாக விடுகிறார்கள். ஆனால் கிராமப் பகுதிகளில் ஓடும் பஸ்கள் சரியான கண்டிஷனில் இல்லாத காரணத்தினால் நான்கைந்து நாட்களுக்கு ஒரு முறைதான் ஓடுவது என்ற நிலையில் உள்ளது. அந்தக் கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பஸ் வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்து, தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்காகப் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு நேரத்தில் போய்ச் செய்ய வாய்ப்பில்லாமல் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் விடப்பட்ட..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நடத்துனர்களைப் பற்றிய கேள்வி. கிராமப் பகுதிகளில் விடப்படும் பஸ்களைப் பற்றி இதில் வராது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

போக்குவரத்துத் துறையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான பணி இறுதிச் சலுகைகள்,

*வினா எண். 154—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துத் துறையில் வேலை செய்து பிறகு கழகங்களுக்கு வந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய (Terminal Benefits) கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப் படவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா?